**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 27.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 7410/E/2018**

திரு S.கதிர்வேலு ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 05.08.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 05.09.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 05.10.2018 |

******

**ஆணை**

இன்று (27.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு S.கதிர்வேலு ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, உதவிப் பொதுத் தகவல் அலுவலர், திரு எம்.பன்னீர்செல்வம், தலைமை உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 05.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் “POINT OUT FIELD BOUNDARY LINE @ Survey No.135/1

and 135/3 Chinnamandali Village, Tirutani Taluk, Thiruvallur District - My Registered Letter dated 20.07.2018 addressed to the Tahsildar, Tirutani Taluk Office, Tirutani and I have applied for Point out my Agricultural field boundaries line, dated 19.02.2016. situated at Survey No.135/1 & 3. Chinnamandali Village, Tiruttani Taluk, Thiruvallur District and not yet pointed out my said boundary lines till date" எனக் குறிப்பிட்டு, அது தொடர்பாக 16 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 05.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை முதுநிலைப் பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 05.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (27.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான உதவிப் பொதுத் தகவல் அலுவலர், 26.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல் வழங்குவதற்குத் தயாராக உள்ளதாகத் தெரிவித்து, விசாரணையின்போது மேல்முறையீட்டாளருக்கு நேரில் சார்வு செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. உதவிப் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவலைப் பெற்றுக்கொண்ட மேல்முறையீட்டாளர், தான் இனம் 1-ல் 19.02.2016 மற்றும் 31.07.2018 தேதிய விண்ணப்பங்கள் குறித்து தகவல் கோரியதாகவும், ஆனால் பொதுத் தகவல் அலுவலரால் 2016-ற்குரிய தகவல் வழங்கப்படவில்லையென்று தெரிவித்து, மேற்படி விண்ணப்பத்தை வட்டாட்சியர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதலை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இனம் 5-ல் யார், யார் என்ற பெயர் வழங்கப்படவில்லையென்றும், இனம் 7 மற்றும் 12-ற்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

7. மேல்முறையீட்டாளரின் வாதுரை குறித்து இன்றைய விசாரணையில் ஆஜரான உதவிப் பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் இனம் 12-ல் கோரியுள்ள தகவல் தொடர்பாக, சம்பந்தப்பட்ட நில அளவையரால் 57 கோப்புகளின் மீது நடவடிக்கை

எடுக்கப்பட்டு, முடிவான அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக ஆணையத்தின் முன்பு தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

8. வாத, பிரதிவாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில், விசாரணையின்போது உதவிப் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்த மேற்படி நில அளவையரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் இதர ஆவணங்கள் குறித்த தகவலை மேல்முறையீட்டாளர் தெரிந்துகொள்ள தடை ஏதும் இல்லை என்றே ஆணையம் தீர்மானிக்கின்றது. எனவே விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 05.08.2018 தேதியிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.135/1 மற்றும் 135/3 தொடர்புடைய ஆக்கிரமிப்பு குறித்த விபரங்கள், அது குறித்து மேல்முறையீட்டாளர் அளித்த விண்ணப்பம், கள ஆய்வாளர்களின் களத் தணிக்கை அறிக்கை ஆகியவை அடங்கிய கோப்பினைத் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2(j)-ன்படி மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு ஆஜர்படுத்தி, ஆய்வு செய்தபின்னர் தனக்குத் தேவைப்படும் விபரங்களைக் குறிப்பெடுத்துக் கொள்ளவும், தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோரும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 7410/E/2018</u>**

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு S.கதிர்வேலு,
22, காந்தி தெரு,
வில்லிவாக்கம்,
சென்னை - 600 049.

Copy to: Judgement File.
*"VP / PA -03.10.19"*